# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 22 | January ஜனவரி | 2022

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




...நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

எரேமியா 29:12


கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 6 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 13 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.Th.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D., **C. சியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**




**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**


**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**
421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை கர்த்தருக்கு உகந்தவர்களாக
உருவாக்கும் உன்னதமானவரின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# ..நான் உங்களுக்கு செவிகொடுப்பேன்

– எரே 29:12

ஆசிரியர் உரை

**P.C. பிலேமோன் ராஜா**



அன்புள்ள கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

வேதாகமத்தில் ஏறக்குறைய 7500 வாக்குத்தத்தங்கள் உள்ளது. ஆயினும் எந்த வாக்குத்தத்தமும் நிபந்தனையின்றி இல்லை. வருடத்திற்கு ஒரு வாக்குத்தத்தம் என படித்தாலும் 7500 ஆண்டுகள் ஆகிவிடும். வாக்குத்தத்தங்கள் அந்தந்த நாட்களில் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கோ, ஒரு குடும்பத்தினருக்கோ, ஏதோ ஒரு குழுவினருக்கோ அல்லது தேசத்திற்கோ கொடுக்கப்பட்டிருக்கும். எல்லாவற்றையும் நமக்கென்றும் எடுத்துக்கொள்ள முடியாது. ஆயினும் அந்த வாக்குத்தத்தங்களினை படிப்பதிலிருந்து, நாம் கர்த்தரையும் அவர் சித்தத்தினையும் அறிந்துகொள்ள முடியும். அது நம் ஆவிக்குரிய வாழ்விற்கு மிகவும் ஊக்கமானதாகவும் இருக்கின்றது.

இஸ்ரவேலர்கள் 70 ஆண்டுகள் பாபிலோனில் அடிமைகளாக சென்ற பின்பு, அவர்களது அடிமைத்தனத்தின் நாட்களில் கர்த்தர் எரேமியா தீர்க்கனை கொண்டு, இந்த அடிமைதனத்திற்கு பின்பு தான் செய்யப்போவதை அவர்களுக்கு அறிவித்தார். இந்த நாளிலும் அவைகளை படிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். **எரேமியா 29:12** "அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்."

### 1. நீங்கள் கூடிவந்து...

**எரேமியா 29:12** "அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்."

'சபை கூடிவருதல்' என்பது இந்த நாட்களில் மிகவும் சவாலான காரியம் தான். கொரோனாவின் தாக்கம் என்பது, சபையாக கூடிவருதலை பெருமளவில் தடை செய்திருக்கின்றது. அரசாங்க சட்டத்திற்கு நாம் கீழ்ப்படிந்து, நோய் வேகமாக பரவும் நேரத்தில் ஒன்றாக கூடிவராமல் இருப்பது என்பது சரியானது தான்; ஆயினும் அநேகர், தடைகள் (Lockdown) நீக்கிய போதும், கூடிவர தருணங்கள் இருக்கின்ற போதும், தங்கள் மனதில் அந்த தடையினை தகர்த்தெறியாமல் இருக்கின்றனர். நோயைப் பற்றிய பயமா? உயிர் பயமா? எது நம்மை தடுக்கின்றது? கர்த்தருடைய வார்த்தை சொல்வதை கவனிப்போம், **எபி 10:25** "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்."

சபை எப்பொழுதுதெல்லாம் கூடி வருகின்றதோ, அப்பொழுதெல்லாம் கூடிவர வேண்டும். அது மாத்திரமல்ல, சபை எப்படியெல்லாம் கூடி வருகின்றதோ (நேரடியாக ஆன்லைன்) மற்றும் அப்படியும் தவறாமல் கூடி வர வேண்டும். ஓரிடத்தில் ஒன்றாக கூடி வர வேண்டும் தான். அது இப்படிப்பட்ட சூழலில் சாத்தியமற்ற போது, ஆன்லைனில் சபை கூடிவருவதை தவிர்க்க வேண்டாம். அப்படி தவறவிடுவது, நம் ஆவியை உள்ளான மனிதனை பெலவீனப்படுத்தும். ஒன்றாக கூடிவருவதைப் போன்றே ஒருமனப்படுவதும் முக்கியமாகும். **மத்தேயு 18:20** "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்."

நாம் சபையாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின்படியே, அவரது அதிகாரத்தோடே, அவரது கட்டளைப்படியே நாம் கூடி வரவேண்டும். **1 கொரி 5:4** "நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில்." அப்படி கூடிவருதல் என்பது நன்மையை உண்டாக்குவதாக இருக்க வேண்டும். அது சக பரிசுத்தவான்களுக்கு இடறலாகவோ,

தடுக்கலாகவோ இருந்துவிடக்கூடாது. கொரிந்து சபையார் அப்படி இருந்ததற்காக கடிந்துகொள்ளப்பட்டனர். **1 கொரி 11:17** "உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறேன் ; நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல், தீமைக் கேதுவாயிருக்கிறது."

நாம் சபையாக கூடி வருதல் என்பது, மற்றவர்களை அன்பிற்கும் நற்கிரியைகளுக்கும் தூண்டுவதாக இருக்க வேண்டும் **(எபிரேயர் 10:24,25).** இந்த ஆண்டு நாம் சபைக்கூடிவருதலை விட்டுவிட மாட்டோம் என தீர்மானம் எடுப்போம்! அதனை முழுமனதோடும் முழு இருதயத்தோடும் செய்வோம்! **எரேமியா 29:13** "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." சபையாக கூடிவருதலை எந்த காரணத்தினைக் கொண்டும் தவற விட வேண்டாம்! அது மிகப்பெரிய பாவமாக இருக்கின்றது. **(எபி 10:26,31).**

## 2. என்னைத் தொழுதுகொண்டு...

**எரேமியா 29:12** "அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்."

இந்த புதிய ஆண்டிலே நாம் எடுக்க வேண்டிய மற்றொரு தீர்மானம், 'எந்த காரணத்தினை கொண்டும் கர்த்தரை தொழுதுக்கொள்வதை நான் விட்டுவிட மாட்டேன்' என்பதாக இருக்க வேண்டும். **வெளி 15:4** "கர்த்தராவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்."

இந்த அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்த, பரம பிதாவை மாத்திரமே தொழுதுகொள்ள வேண்டும். **வெளி 14:7** "மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுகொள்ளுங்கள் என்று கூறினான்."

அவரவர் கிரியைக்கு தக்க பலனை கொடுக்கின்ற நியாயாதிபதியாகவும் அவர் இருக்கின்றார். **1 பேதுரு 1:17** "அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்."

அந்த பரமபிதாவை, நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என ஆண்டவர் இயேசு கட்டளையாக நமக்கு கொடுத்திருக்கின்றார். **யோவான் 4:24** "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்." அவரை மாத்திரமே தொழுதுகொள்ள வேண்டும் என்றும் கட்டளையிட்டிருக்கின்றார். **(மத்தேயு 4:10).**

பரிசுத்த பிதாவாகிய அவரை, நாம் பரிசுத்த அலங்காரத்துடனே தொழுகை செய்யும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. **சங்கீதம் 29:2** "கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்." மேலும் அதை விளையாட்டுத்தனமாக செய்யாமல், பயத்துடனும், நடுக்கத்துடனும் செய்யும்படி நம்மை எச்சரிக்கவும் செய்கின்றது **(சங் 2:11).** அதனை ஒருமனப்பட்டு செய்ய வேண்டும் **(செப்பனியா 3:9).** தம்மை தொழுதுக்கொள்கின்ற அனைவருக்கும் அவர் ஐசுவரியசம்மபன்னராக இருக்கின்றார். **ரோமர் 10:12** "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்."

ஆகையால் சங்கீதக்காரன் நான் உயிரோடிருக்கும் வரை, இரட்சிப்பின் பாத்திரத்துடன், நன்றிபலிகளை செலுத்தி அவரை தொழுதுக்கொள்ளுவேன் என்று தீர்மானம் செய்தது போல, நாமும் செய்து செயல்படுவோம். **சங்கீதம் 116:2,13,17** "அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை

எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்."

### 3. என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்...


**எரேமியா 29:12** "அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்."

இந்த புதிய ஆண்டிலே நாம் எடுக்க வேண்டிய மற்றொரு தீர்மானம், 'நான் ஜெபம் செய்வதை விட்டுவிட மாட்டேன்'. நாம் எல்லா மனிதர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டியவர்கள். **தீமோத்தேயு 2:1** "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்."

நாம் எதை குறித்தும் கவலைப்படாமல், எல்லாவற்றிற்காகவும் ஜெபம் செய்வோம். **பிலி 4:6** "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்."

## சிறுவர்க்கான கேள்விகள்

### இஸ்ரவேலின் 12 கோத்திரங்கள்



வார்த்தைகள் :
ரூபன், சிமியோன், யூதா, செபுலோன், காத், இசக்கார், தாண், ஆசேர், நப்தலி, மனாசே, எப்பிராயீம், பென்யமீன்.

பைபிள் ஜெபம் என்பது நம் வாழ்வில் சங்கிலி தொடர் போன்று தொடர்ந்து செய்ய வேண்டிய ஒன்று என்கின்றது. **கொலோ 4:2** "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்."

சோதனையில் விழாதபடிக்கு ஜெபிக்க வேண்டும். **(மாற்கு 14:38).** துன்பத்தின் வேளையில் ஜெபிக்க வேண்டும் **(யாக் 5:13).** வியாதியின் வேளையில் ஜெபிக்க வேண்டும் **(யாக் 5:15, 16).** மேலும், எப்பொழுதும் எல்லாருக்காகவும் ஜெபித்து விழித்திருங்கள் எனவும் அறைகூவல் விடுக்கின்றது. **எபேசியர் 6:18** "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." ஆகையால் நாம் ஜெபம் செய்வதில் முதலாம் நூற்றாண்டு பரிசுத்தவான்களைப் போலவும், அப்போஸ்தலர்கள் போலவும் இடைவிடாமல் தரித்திருப்போம். **(அப் 2:42; 6:4).**

பிரியமானவர்களே ! நாம் கிறிஸ்துவின் அதிகாரத்தின்படியே கூடிவந்து, பரலோக பிதாவை தொழுதுகொண்டு, அவரை நோக்கி விண்ணப்பங்களை இடைவிடாமல் ஏறெடுப்போம்; அவர் நமது விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பார். அவர் சொன்னதை செய்கின்ற வாக்குமாறாத கர்த்தர். ஆகையால், நாம் எடுத்த தீர்மானங்களில் உறுதியாக இருந்து செயல்படுத்துவோம். ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் கேட்பவைகளை, நிச்சயம் பெற்றுக்கொள்வோம் என்ற விசுவாச உறுதியுடனே ஜெபிப்பபோம். அவர் சொன்னபடியே செவி கொடுப்பார். **யோவான் 16:23** "அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்."

அன்புடன்,
**–ஆசிரியர்**

# ஆச்சரியமூட்டும் அன்னாள்

சகோதரி : பேபி ராஜா



எனக்கன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எனது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த மாதம் அன்னாள் என்ற தீர்க்கதரிசியிடமிருந்து, நாம் சில பாடங்களை கற்றுக் கொள்வோம். **லூக்கா 2:36,** "ஆசேருடைய கோத்திரங்களும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்".

அன்னாளை பற்றிய ஆவியானவரின் அறிமுகமே ஆச்சரியமூட்டுவதாக இருக்கின்றது. அவள் இளம் வயதிலேயே கணவனை இழந்து, அதிக வயது முதிர்ந்த தீர்க்கதரிசியாக இருக்கின்றாள். ஏறக்குறைய 84 வயதுள்ள ஒரு விதவை தாய். அவளுக்கு பிள்ளைகள் இருந்ததாக குறிப்பு இல்லை. அவள் பானுவேல் என்பவரின் மகள், மற்றும் ஆசேர் கோத்திரத்தினை சார்ந்தவள் என அறிமுகம் செய்யப்பட்டுள்ளாள். அந்த விதவை தாயிடமிருந்து இந்த புதிய ஆண்டிலே நாம் தீர்மானம் எடுக்கும்படியாக சில குணங்களை கற்றுக்கொள்வோம்.

### 1. அன்னாள் ஒரு ஜெப தாய்

**லூக்கா 2:37** "ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, <u>ஜெபம்பண்ணி,</u> ஆராதனை செய்து கொண்டிருந்தாள்."

இரவும் பகலும் ஜெபிக்கின்ற ஒரு தாயாக நாம் அன்னாளை அறிகின்றோம். ஜெபிக்க நேரமில்லை எனவும், குறைவாக ஜெபித்தால் போதும் என மனநிலை உடையவருக்கும், இந்த அன்னாள், 'என்னை போல நீங்களும் ஜெப பெண்மணியாக உங்களை நீங்களே உருவாக்கி கொள்ளுங்கள்' என்று நம் அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றாள். நாம் அனைவருக்கும் ஜெபிக்கின்ற பழக்கம் இருக்கும். ஒரு நாளைக்கு எத்தனை முறை ஜெபிக்கின்றோம்? எவ்வளவு மணி நேரம் ஜெபிக்கின்றோம்? எந்தெந்த காரியங்களுக்காக ஜெபிக்கின்றோம்? யார் யாருக்காக ஜெபிக்கின்றோம்? ஜெபம் செய்வதை பற்றி பைபிள் என்ன சொல்கின்றது. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என பாகுபாடு இன்றி, எல்லாருக்காகவும், எப்பொழுதும் மற்றும் எல்லா காரியங்களிற்காகவும் ஜெபிக்க வேண்டும். **(எபே 6:18: பிலி 4:6: 1 தீமோ 2:1).** ஆகையால் இந்த ஆண்டு ஜெபம் செய்வதைப் பற்றி தீர்க்கமான தீர்மானம் எடுத்து செயல்படுத்துவோம்.

### 2. அன்னாள், ஒரு தேவபக்தியுள்ள தாய்

**லூக்கா 2:37** "ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை <u>தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து,</u> ஜெபம் பண்ணி, <u>ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.</u>"

அன்னாள் உபவாசம் மற்றும் தேவாலயத்தினை விட்டு நீங்காதிருந்தாள் என படிக்கின்றோம். நாம் எப்படி? தேவ பக்தியான காரியங்களில் நமது ஈடுபாட எப்படி உள்ளது? ஆர்வமாக, ஆசையாக ஈடுபடுகின்றோமா? கர்த்தரை தேடுகின்ற காரியங்களில் நமது பங்களிப்பு என்னவாக உள்ளது? சற்று யோசித்து, முடிவெடுத்து இந்த ஆண்டில் தேவ பக்தியில் இன்னும் வளர முயலுவோம்.

### 3. அன்னாள் கிறிஸ்துவை அறிவித்த தாய்

**லூக்கா 2:38** "அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்."

அன்னாளிடமிருந்து நாம் கற்று செய்ய வேண்டிய

மற்றொரு காரியம், அவள் அநேகருக்கு ஆண்டவர் இயேசுவை அறிவித்தாள். அதாவது, ஆண்டவரை பற்றிய செய்தியை அநேகரிடம் கொண்டு சேர்த்தாள். நாம் இந்த ஆண்டில் குறைந்த பட்சம் தினமும் ஒருவருக்காவது ஆண்டவரைப் பற்றி சொல்வோம். அது நமது கடமையாகவும், செலுத்தி தீர்க்க வேண்டிய கடனாகவும் உள்ளது **(1 கொரி 9:16: ரோமர் 1:14–16).** புதிய ஆண்டில் புதிய தீர்மானங்களுடன் பரலோகத்தினை நோக்கிய நமது பயணத்தினை இன்னும் மேம்படுத்துவோம். நீதியுள்ள நியாதிபதியாகிய நமது ஆண்டவர் இயேசுவை சந்திக்க, புத்தியுள்ள கன்னிகைகளைப் போல ஆயத்தப்படுவோம் **(மத் 25:1–10).** எல்லாம் வல்ல கர்த்தர் உதவி செய்வாராக!

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி,
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
இப்பத்திரிக்கை இன்னும் அநேகருக்கு
ஆத்தும நன்மை தரும்படி உதவுங்கள் !

ஆண்டு சந்தா : ரூ. 120/-

GPay No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

**பொதுவான செய்திகள்**

## ஒமிக்குரோன்

- ஒமிக்குரோன் திரிபு (SARS-CoV-2 Omicron Variant) தென்னாப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் வேற்றுருவம் ஆகும்.
- இந்த மாறுபாடு முதலில் 2021ம் ஆண்டு நவம்பர் 24ம் தேதியன்று தென்னாப்பிரிக்காவிலிருந்து உலக சுகாதார அமைப்புக்கு தெரிவிக்கப்பட்டது.
- இப்புதிய வகை கொரோனா வைரஸ் போட்சுவாளா, பெல்சியம், ஹாங்காங், இஸ்ரேல், ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.
- ஆல்பா, பீட்டா, டெல்டா என்ற உருமாற்றங்களை தொடர்ந்து வைரஸின் மரபணு வரிசையில் பி.'பி.1.1.529' எனும் புதிய பிறழ்வு ஏற்பட்டு ஒமைக்ரான் வேற்றுருவம் தோன்றியுள்ளது என உலக சுகாதார நிறுவனம் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் தேதியன்று அறிவித்துள்ளது.

**நோய் அறிகுறிகள் :**

"பொதுவான அறிகுறிகளாக இருமல், சோர்வு மற்றும் மூச்சுத் திணறல் அல்லது மூக்கு ஒழுகுதல்" என்று கண்டறியபட்டது.

**பாதுகாப்பு : முக கவசம் அணிவது**

- சமூக இடைவெளியை கடைபிடிப்பது
- கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் செல்லாமல் இருப்பது.
- முக்கியமாக இது வரையில் தடுப்பூசி போடாதவர்கள் 2 தவணை தடுப்பூசிகளையும் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

# இந்த அட்டவணையின்படி உங்கள் தினசரி வேத வாசிப்பை

## 52 வார வேத வாசிக்கும் திட்டம்

9244214421

| வாரம் | நிருபங்கள் | சட்ட புத்தகங்கள் | சரித்திர புத்தகம் | சங்கீதம் | பாட்டு புத்தகங்கள் | தீர்க்கதரிசன புத்தகங்கள் | சுவிசேஷ புத்தகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| 1 | ரோமர் 1-2 | ஆதி 1-3 | யோசு 1-5 | சங் 1-2 | யோபு 1-2 | ஏசா 1-6 | மத் 1-2 |
| 2 | ரோமர் 3-4 | ஆதி 4-7 | யோசு 6-10 | சங் 3-5 | யோபு 3-4 | ஏசா 7-11 | மத் 3-4 |
| 3 | ரோமர் 5-6 | ஆதி 8-11 | யோசு 11-15 | சங் 6-8 | யோபு 5-6 | ஏசா 12-17 | மத் 5-7 |
| 4 | ரோமர் 7-8 | ஆதி 12-15 | யோசு 16-20 | சங் 9-11 | யோபு 7-8 | ஏசா 18-22 | மத் 8-10 |
| 5 | ரோமர் 9-10 | ஆதி 16-19 | யோசு 21-24 | சங் 12-14 | யோபு 9-10 | ஏசா 23-28 | மத் 11-13 |
| 6 | ரோமர் 11-12 | ஆதி 20-23 | நியாயா 1-6 | சங் 15-17 | யோபு 11-12 | ஏசா 29-33 | மத் 14-16 |
| 7 | ரோமர் 13-14 | ஆதி 24-27 | நியாயா 7-11 | சங் 18-20 | யோபு 13-14 | ஏசா 34-39 | மத் 17-19 |
| 8 | ரோமர் 15-16 | ஆதி 28-31 | நியாயா 12-16 | சங் 21-23 | யோபு 15-16 | ஏசா 40-44 | மத் 20-22 |
| 9 | 1 கொரி 1-2 | ஆதி 32-35 | நியாயா 17-21 | சங் 24-26 | யோபு 17-18 | ஏசா 45-50 | மத் 23-25 |
| 10 | 1 கொரி 3-4 | ஆதி 36-39 | ரூத் 1-4 | சங் 27-29 | யோபு 19-20 | ஏசா 51-55 | மத் 26-28 |
| 11 | 1 கொரி 5-6 | ஆதி 40-43 | 1 சாமு 1-5 | சங் 30-32 | யோபு 21-22 | ஏசா 56-61 | மாற்கு 1-2 |
| 12 | 1 கொரி 7-8 | ஆதி 44-47 | 1 சாமு 6-10 | சங் 33-35 | யோபு 23-24 | ஏசா 62-66 | மாற்கு 3-4 |
| 13 | 1 கொரி 9-10 | ஆதி 48-50 | 1 சாமு 11-15 | சங் 36-38 | யோபு 25-26 | எரே 1-6 | மாற்கு 5-6 |
| 14 | 1 கொரி 11-12 | யாத் 1-4 | 1 சாமு 16-20 | சங் 39-41 | யோபு 27-28 | எரே 7-11 | மாற்கு 7-8 |
| 15 | 1 கொரி 13-14 | யாத் 5-8 | 1 சாமு 21-25 | சங் 42-44 | யோபு 29-30 | எரே 12-16 | மாற்கு 9-10 |
| 16 | 1 கொரி 15-16 | யாத் 9-12 | 1 சாமு 26-31 | சங் 45-47 | யோபு 31-32 | எரே 17-21 | மாற்கு 11-12 |
| 17 | 2 கொரி 1-3 | யாத் 13-16 | 2 சாமு 1-4 | சங் 48-50 | யோபு 33-34 | எரே 22-26 | மாற்கு 13-14 |
| 18 | 2 கொரி 4-5 | யாத் 17-20 | 2 சாமு 5-9 | சங் 51-53 | யோபு 35-36 | எரே 27-31 | மாற்கு 15-16 |
| 19 | 2 கொரி 6-8 | யாத் 21-24 | 2 சாமு 10-14 | சங் 54-56 | யோபு 37-38 | எரே 32-36 | லூக்கா 1-2 |
| 20 | 2 கொரி 9-10 | யாத் 25-28 | 2 சாமு 15-19 | சங் 57-59 | யோபு 39-40 | எரே 37-41 | லூக்கா 3-4 |
| 21 | 2 கொரி 11-13 | யாத் 29-32 | 2 சாமு 20-24 | சங் 60-62 | யோபு 41-42 | எரே 42-46 | லூக்கா 5-6 |
| 22 | கலா 1-3 | யாத் 33-36 | 1 இராஜா 1-4 | சங் 63-65 | நீதி 1 | எரே 47-52 | லூக்கா 7-8 |
| 23 | கலா 4-6 | யாத் 37-40 | 1 இராஜா 5-9 | சங் 66-68 | நீதி 2-3 | புலம்பல் 1-5 | லூக்கா 9-10 |
| 24 | எபேசி 1-3 | லேவி 1-3 | 1 இராஜா 10-13 | சங் 69-71 | நீதி 4 | எசேக் 1-6 | லூக்கா 11-12 |
| 25 | எபேசி 4-6 | லேவி 4-6 | 1 இராஜா 14-18 | சங் 72-74 | நீதி 5-6 | எசேக் 7-12 | லூக்கா 13-14 |

## மேற்கொண்டு, ஒரு வருடத்தில் முழு பைபிளையும் வாசித்து முடியுங்கள் !

# 52 வார வேத வாசிக்கும் திட்டம்

9244214421

| வாரம் | நிருபங்கள் | சட்ட புத்தகங்கள் | சரித்திர புத்தகம் | சங்கீதம் | பாட்டு புத்தகங்கள் | தீர்க்கதரிசன புத்தகங்கள் | சுவிசேஷ புத்தகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| 26 | ☐ பிலிப் 1-2 | ☐ லேவி 7-9 | ☐ 1 இராஜா 19-22 | ☐ சங் 75-77 | ☐ நீதி 7 | ☐ எசேக் 13-18 | ☐ லூக்கா 15-16 |
| 27 | ☐ பிலிப் 3-4 | ☐ லேவி 10-12 | ☐ 2 இராஜா 1-5 | ☐ சங் 78-80 | ☐ நீதி 8-9 | ☐ எசேக் 19-24 | ☐ லூக்கா 17-18 |
| 28 | ☐ கொலோ 1-2 | ☐ லேவி 13-15 | ☐ 2 இராஜா 6-10 | ☐ சங் 81-83 | ☐ நீதி 10 | ☐ எசேக் 25-30 | ☐ லூக்கா 19-20 |
| 29 | ☐ கொலோ 3-4 | ☐ லேவி 16-18 | ☐ 2 இராஜா 11-15 | ☐ சங் 84-86 | ☐ நீதி 11-12 | ☐ எசேக் 31-36 | ☐ லூக்கா 21-22 |
| 30 | ☐ 1 தெச 1-3 | ☐ லேவி 19-21 | ☐ 2 இராஜா 16-20 | ☐ சங் 87-89 | ☐ நீதி 13 | ☐ எசேக் 37-42 | ☐ லூக்கா 23-24 |
| 31 | ☐ 1 தெச 4-5 | ☐ லேவி 22-24 | ☐ 2 இராஜா 21-25 | ☐ சங் 90-92 | ☐ நீதி 14-15 | ☐ எசேக் 43-48 | ☐ யோவா 1-2 |
| 32 | ☐ 2 தெச 1-3 | ☐ லேவி 25-27 | ☐ 1 நாளா 1-4 | ☐ சங் 93-95 | ☐ நீதி 16 | ☐ தானி 1-6 | ☐ யோவா 3-4 |
| 33 | ☐ 1 தீமோ 1-3 | ☐ எண் 1-4 | ☐ 1 நாளா 5-9 | ☐ சங் 96-98 | ☐ நீதி 17-18 | ☐ தானி 7-12 | ☐ யோவா 5-6 |
| 34 | ☐ 1 தீமோ 4-6 | ☐ எண் 5-8 | ☐ 1 நாளா 10-14 | ☐ சங் 99-101 | ☐ நீதி 19 | ☐ ஓசியா 1-7 | ☐ யோவா 7-9 |
| 35 | ☐ 2 தீமோ 1-2 | ☐ எண் 9-12 | ☐ 1 நாளா 15-19 | ☐ சங் 102-104 | ☐ நீதி 20-21 | ☐ ஓசியா 8-14 | ☐ யோவா 10-12 |
| 36 | ☐ 2 தீமோ 3-4 | ☐ எண் 13-16 | ☐ 1 நாளா 20-24 | ☐ சங் 105-107 | ☐ நீதி 22 | ☐ யோவேல் 1-3 | ☐ யோவா 13-15 |
| 37 | ☐ தீத்து 1-3 | ☐ எண் 17-20 | ☐ 1 நாளா 25-29 | ☐ சங் 108-110 | ☐ நீதி 23-24 | ☐ ஆமோஸ் 1-4 | ☐ யோவா 16-18 |
| 38 | ☐ பிலேமோன் 1 | ☐ எண் 21-24 | ☐ 2 நாளா 1-5 | ☐ சங் 111-113 | ☐ நீதி 25 | ☐ ஆமோஸ் 5-9 | ☐ யோவா 19-21 |
| 39 | ☐ எபிரே 1-4 | ☐ எண் 25-28 | ☐ 2 நாளா 6-10 | ☐ சங் 114-116 | ☐ நீதி 26-27 | ☐ ஒபதியா 1 | ☐ அப்போ 1-2 |
| 40 | ☐ எபிரே 5-7 | ☐ எண் 29-32 | ☐ 2 நாளா 11-15 | ☐ சங் 117-118 | ☐ நீதி 28 | ☐ யோனா 1-4 | ☐ அப்போ 3-4 |
| 41 | ☐ எபிரே 8-10 | ☐ எண் 33-36 | ☐ 2 நாளா 16-20 | ☐ சங் 119 | ☐ நீதி 29-30 | ☐ மீகா 1-7 | ☐ அப்போ 5-6 |
| 42 | ☐ எபிரே 11-13 | ☐ உபா 1-3 | ☐ 2 நாளா 21-24 | ☐ சங் 120-121 | ☐ நீதி 31 | ☐ நாகூம் 1-3 | ☐ அப்போ 7-8 |
| 43 | ☐ யாக் 1-3 | ☐ உபா 4-6 | ☐ 2 நாளா 25-28 | ☐ சங் 122-124 | ☐ பிரசங்கி 1-2 | ☐ ஆபகூக் 1-3 | ☐ அப்போ 9-10 |
| 44 | ☐ யாக் 4-5 | ☐ உபா 7-9 | ☐ 2 நாளா 29-32 | ☐ சங் 125-127 | ☐ பிரசங்கி 3-4 | ☐ செப்பனி 1-3 | ☐ அப்போ 11-12 |
| 45 | ☐ 1 பேது 1-3 | ☐ உபா 10-12 | ☐ 2 நாளா 33-36 | ☐ சங் 128-130 | ☐ பிரசங்கி 5-6 | ☐ ஆகாய் 1-2 | ☐ அப்போ 13-14 |
| 46 | ☐ 1 பேது 4-5 | ☐ உபா 13-15 | ☐ எஸ்றா 1-5 | ☐ சங் 131-133 | ☐ பிரசங்கி 7-8 | ☐ சகரியா 1-7 | ☐ அப்போ 15-16 |
| 47 | ☐ 2 பேது 1-3 | ☐ உபா 16-19 | ☐ எஸ்றா 6-10 | ☐ சங் 134-136 | ☐ பிரசங்கி 9-10 | ☐ சகரியா 8-14 | ☐ அப்போ 17-18 |
| 48 | ☐ 1 யோ 1-3 | ☐ உபா 20-22 | ☐ நெகே 1-4 | ☐ சங் 137-139 | ☐ பிரசங்கி 11-12 | ☐ மல்கியா 1-4 | ☐ அப்போ 19-20 |
| 49 | ☐ 1 யோ 4-5 | ☐ உபா 23-25 | ☐ நெகே 5-9 | ☐ சங் 140-142 | ☐ உ.பாட்டு 1-2 | ☐ வெளி 1-6 | ☐ அப்போ 21-22 |
| 50 | ☐ 2 யோ 1 | ☐ உபா 26-28 | ☐ நெகே 10-13 | ☐ சங் 143-145 | ☐ உ.பாட்டு 3-4 | ☐ வெளி 7-11 | ☐ அப்போ 23-24 |
| 51 | ☐ 3 யோ 1 | ☐ உபா 29-31 | ☐ எஸ்தர் 1-5 | ☐ சங் 146-148 | ☐ உ.பாட்டு 5-6 | ☐ வெளி 12-17 | ☐ அப்போ 25-26 |
| 52 | ☐ யூதா 1 | ☐ உபா 32-34 | ☐ எஸ்தர் 6-10 | ☐ சங் 149-150 | ☐ உ.பாட்டு 7-8 | ☐ வெளி 18-22 | ☐ அப்போ 27-28 |

# இருதயத்தில் உறுதியாக தீர்மானியுங்கள்!

(1 கொரி 9:24-26)

அன்பான வாலிப தம்பி தங்கைகளுக்கு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துக்கொண்டு, உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கர்த்தர் ஒரு புதிய ஆண்டை தமது கிருபையினால் ஆசீர்வதித்து கொடுத்திருக்கின்றார். கடந்த ஆண்டு முழுதும் நம்மோடு இருந்து, எல்லா சூழ்நிலைகளையும் தாண்டி வரவும், கொடிய நோய் தொற்றிலிருந்து மிகப்பெரிய பாதுகாப்பையும் கொடுத்த கர்த்தருக்கு முதலாவது நன்றி சொல்வோம். ஏனென்றால், அவர் வருஷங்களை நன்மையினால் முடிசூட்டுகின்றார் என்று சங் 65:11 வேதம் சொல்கிறது. எனவே இந்த 2022ம் ஆண்டு ஒரு நன்மையான ஆண்டாக அமைய நாம் எல்லாம்வல்ல தேவனிடம் பிரார்த்தனையோடு நல்ல ஆவிக்குரிய தீர்மானம் செய்வோம்.

## பெற்றுக்கொள்ளும்படியான ஓட்டம் :

**1 கொரி 9:24**

ஒவ்வொரு ஆண்டும் நாம் ஆவிக்குள்ளான அநேக தீர்மானங்களை எடுப்போம். சில நாட்களில் அவற்றை மறந்தே விடுகின்றோம். முதலில் எளிமையான தீர்மானம் ஒன்றினை குறுகிய நாட்களுக்கு எடுத்து நிறைவேற்ற முயற்சிப்போம். அவற்றில் நிலைத்திருக்கும் போதுதான் கர்த்தருக்குள் இன்னும் ஆழமான தீர்மானங்களை எடுக்க உதவியாக இருக்கும்.

முதலில், இந்த வருடத்தின் அனைத்து கர்த்தருடைய நாள் தொழுகையிலும் கலந்துகொள்வேன் தவறவே மாட்டேன் என உறுதியாக தீர்மானிப்போம். கர்த்தரின் தொழுகைக்கு செல்வது என்பது மாபெரும் ஆசீர்வாதத்தின் வழியாக இருக்கிறது. **எபி. 12:1** பொறுமையோடே ஓட வேண்டுமென்று சொல்கின்றது. அப்போதுதான், நம்முடைய ஓட்டத்திற்கான வெகுமதி நமக்கு கிடைக்கும். **பிலி 3:14,** அப்படி தொடர்ந்து கர்த்தருக்காக ஓடும்போது, இறுதி பரிசாகிய நித்திய ஜீவனையும் நம்முடைய மறுமை வாழ்வில் பெறுவோம்.

## இச்சையடக்கத்தோடு இருங்கள்:

**1 கொரி 9:25**

கிறிஸ்தவ வாழ்வில் நம் நினைவில் எப்போதும் இருக்க வேண்டிய ஒன்று இச்சையாக்கம். ஏனெனில், ஆதியிலிருந்து வேதாகமம் நெடுகிலும் சாத்தான் பயன்படுத்துகிற ஒரு ஆயுதம் 'இச்சையாக' இருக்கிறது. அதிலிருந்து நம்மைக் காப்பாற்றும்படியாகத்தான் 'வேதாகமம்' என்கிற 'கடவுளின் வார்த்தை நம்மோடு இருக்கிறது. **(வெளி 2:10)** நாம் மரண பரியந்தம் இச்சையடக்கத்தோடு பொறுமையாக இருக்க வேண்டும். **(யாக் 1:12)** சோதனைகளை சகிக்க வேண்டும். **I யோவ 2:16.,** இச்சைக்குண்டான யாவும் நம்முடைய பிதாவாகிய கர்த்தரால் உண்டானதல்ல என்பதை ஆழமாக புரிந்துகொள்வோம். கர்த்தரை சார்ந்த காரியங்களில் அதிகமான ஈடுபாடு காண்பிப்போம். கர்த்தருடைய பிள்ளைகளோடு உறவை வளர்த்துக் கொள்வோம். சபை கூடி வருவதிலும், வேதத்தை ஆராய்வதிலும் அதிக ஆர்வம் காண்பிப்போம்.

பெற்றுக்கொள்ளும்படியான ஒரு உறுதியான ஓட்டமும், இச்சையடக்கமான பயபக்தியுள்ள கிறிஸ்தவ வாழ்வும் இந்த ஆண்டின் ஆவிக்குரிய தீர்மானமாக இருக்க ஜெபித்து முடிவெடுப்போம். எல்லாம்வல்ல தேவன் இந்த முயற்சியில் உங்களோடே இருப்பாராக.

– உங்கள் அண்ணன்

**JP**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ஹானா ஜோதி – மதுரை
2. S. கனிஷ்கா – கரூர்
3. S. லக்ஷிதா – கரூர்
4. M. ராஜா – கரூர்
5. டேஃப்னி ஜுனித்தா – சென்னை
6. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை

### கேள்வி பதில் பகுதி சென்ற மாத விடுபட்டவர்கள்

1. A. ரோஸ்மேரி – சென்னை
2. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி

# வரலாற்றில் கிறிஸ்துவைப் பற்றிய ஆதாரங்கள்

## Evidence of Christ in History

- ADY


பாடம் - 1

### யூத மற்றும் ரோம வரலாற்றாலர்கள்

தொடர்ச்சி...

இது ஒரு எதிர்ப்பு உணவர்வுள்ள கூட்டத்தாரால் கொடுக்கப்பட்ட ஆதாரம் தரும் சாட்சியாகும். எதிர்பாளிகளான யூத தலைவர்கள் இயேசு, பஸ்கா நேரத்தில் தொங்கவிடப்பட்டார். (சிலுவையில் அறையப்படுதலுக்கான யூத விளக்கம் அப் 5:30; 10:39) என உறுதி செய்தனர். மேலும் அவர் அற்புதங்களை செய்தார் (அதை அவர்கள் பில்லிசூனியம் என்றார்); மேலும், சில யூத போதனைகளில் இருந்து அநேகரை வழிவிலகச் செய்தார். யூதத் தலைவர்கள் அவரை கல்லெறிந்து கொல்ல திட்டமிட்டனர்; ஆனாலும், அதற்கு பதில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். இந்தப் பகுதியில் உள்ள எல்லா முக்கிய குறிப்புகளும் சுவிசேஷ புத்தகங்களில் உள்ளவைகளோடு முற்றிலும் ஒத்துப்போகிறது.

#### இளையவரான ப்ளைனி (Pliny the Younger):



இரண்டாம் நூற்றாண்டின் முந்தையப் பகுதியில் இளையவரான ப்ளைனி, பித்தினியாவின் ஆளுனராக (தற்போது வடமேற்கு துருக்கி) இருந்தார். அங்கே அவர், தன்னைத்தானே ஒரு குழப்பத்துடன் கண்டார். அவருக்கு முன்பாக கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவர்கள் ஆபத்தற்றவர்களாக இருந்ததைக் கண்டார்; ஆனாலும், அவர்கள் பிடிவாதமாக ரோம பேரரசை வணங்க மறுத்தனர். மேலும், அவர்கள் சிலைவழிபாட்டை பகிரங்கமாக எதிர்த்ததினால் சிலை வியாபாரத்தை பாதித்தனர். இச்சூழலில் ப்ளைனி, கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்த சில கிறிஸ்தவர்களை கொன்றுவிட தீர்மானித்தான். தான் செய்யப்போவது சரிதானா என, உறுதியற்ற நிலையில், ப்ளைனி தன் நண்பனாகிய ட்ராஜான் பேரரசனுக்கு கடிதம் எழுதி, அவன் யோசனையை கோரினான். இந்தக் கடிதம் கி.பி. 112ஐ சார்ந்தது.

ப்ளைனி (Pliny) எழுதியது என்னவென்றால், "நான் ஒருபோதும் கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் செயலில் ஈடுபட்டதில்லை. ஆகையால், இந்த வகையினரை தண்டிப்பதோ, விசாரிப்பதோ எந்த அளவிற்கு சரி என தெரியவில்லை.

இச்சமயத்தில், தங்களை கிறிஸ்தவர்கள் என்பவர்களிடம் நான் பின்வரும் செயல்பாட்டினைக் கண்டேன்; மேலும், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதில் உறுதியுடன் உள்ளனரா என நான் விசாரித்தேன்; அப்படியே அறிக்கை செய்தவர்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் முறையும் விசாரித்தேன்; மேலும், அவர்கள் கிறிஸ்தவராயிருப்பின் தண்டிக்கப்படுவர் என்றும் மிரட்டினேன்; தொடர்ந்து நிலைநின்றவர்களை தண்டித்தேன். அவர்களுடைய கொள்கை, பிடிவாதம் மற்றும் வளைந்து கொடுக்காத தன்மை எப்படியாயிருப்பினும், எனக்கு சந்தேகமேயில்லை அவர்கள் தண்டனைக்குரியவர்கள்.

இப்படிப்பட்ட நம்பிக்கை உடைய பிற வகுப்பினரும் இருந்தனர். ஆனால், அவர்கள் ரோம பிரஜைகளாகையால், அவர்களை ரோமாபுரிக்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டேன்.

அவர்கள் (கிறிஸ்தவர்கள்) உறுதியாக இருந்தனர்; எனினும், அவர்களுடைய குற்றம் என்னவெனில், ஒரு குறிப்பிட்ட நாளில் விடிவதற்கு முன் ஒன்றுகூடி, கிறிஸ்துவே கடவுள் என்று பாடல்களை பாடி இருப்பதே; மேலும், தவறு செய்யக்கூடாது,

திருடக்கூடாது, விபச்சாரம் கூடாது என்பதைப் போன்ற உறுதிமொழிகளினால் ஒன்றரக்கட்டினது மட்டுமின்றி தங்கள் விசுவாசத்தை பொய்யாக்கவோ அல்லது அதை திருப்பி கொடுக்க நிர்பந்திக்கும் போதும் விட்டுவிடாதிருக்கவோ செய்கின்றனர். இவைகள் முடிந்தவுடன் பிரிந்து போய் மறுபடியும் உணவு உண்ணும்படி, அதாவது சாதாரண குற்றமில்லா உணவு உண்ணும்படி ஒன்று கூடுகின்றனர்.

இதனிமித்தம் நான் இந்த விசாரனையை தள்ளி வைத்து உன்னை கலந்தாலோசிக்க முடிவு செய்தேன். அவர்களின் எண்ணிக்கையை பார்த்தபடியினால், இதை உன்னோடு ஆலோசிக்க விரும்பகிறேன். ஏனெனில், எல்லா வயதினரிலும், எல்லா தரப்பினரிலும் மற்றும் எல்லா பாலினத்தவரிலும் அநேகம் பேர் இதனால் தண்டிக்கப்படக்கூடும். ஏனெனில், இந்த நம்பிக்கையானது பட்டணங்களில் மட்டுமின்றி கிராமங்களிலும், பண்ணைகளிலும் பரவியுள்ளது". (புத்தகம் பத்து).

இந்தக் கடிதம், இரண்டாம் நூற்றாண்டின் முன்பகுதியில் கிறிஸ்தவத்தைப் பற்றிய விபரங்களின் ஒரு முக்கியமான ஆதாரமாகும். இதிலிருந்து, பித்தினியாவில் (Bithynia) இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை தேவனென்று ஆராதித்து, உயரிய ஒழுக்க மற்றும் நன்னெறி வரைமுறைகளை உடையவர்களாயிருந்து, கிறிஸ்துவை மறுதலிப்பதைவிட மரிக்கவும் ஆயத்தமாயிருந்தனர்; அதினால் கிறிஸ்தவம் எல்லா சமூகத்தினர் மற்றும் தரப்பினரிடமும், ரோமப் பிரஜைகள் உட்பட எல்லாரிடமும் அபரீத வளர்ச்சியடைந்தது.



## கொர்நெலியு தாசிதஸ் (Cornelius Tacitus):

2ம் நூற்றாண்டின் மிக முக்கியமான ரோம வரலாற்றாலர், 'தாசிதஸ்'; மேலும், புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலான மிக முக்கியமான கிறிஸ்துவைப் பற்றிய குறிப்பை இவர் கொடுத்துள்ளார்.

கிறிஸ்துவின் மரணத்திற்கு பின், சுமார் 20 வருடங்களுக்கு பின், கி.பி. 54ல் பிறந்த இவர், வெஸ்பாசியனுக்கு கீழ் செனடராகவும், பின்பு ஆசியா மைனரின் பிரதிநிதியாகவும் இருந்தார். இவர் வரலாற்றைப் பற்றி எழுதிய தன்னுடைய 5 புத்தகங்களுக்காக நன்கு அறியப்பட்டவர்; மேலும் அவைகளில் 4 புத்தகங்கள் நிலைத்துள்ளன. மேலும் இவர், "அன்னல்ஸ்" என்னும் 12 பாகம் கொண்ட தொகுப்பையும் எழுதியுள்ளார்.

சுமார் கி.பி. 115ல், தாசிதஸ் தன்னுடைய அன்னல்ஸ் 15-44ல் எழுதியது என்னவெனில், கி.பி. 64ல் ரோமாபுரியை அழித்த நெருப்பின் நிமித்தமாக தன் மீது வந்த சந்தேகத்தை திசை திருப்பும்படி கிறிஸ்தவர்களை நீரோ மன்னன் கொலை செய்தான். மேலும் அவர் எழுதும்போது, "நீரோ தனது குற்றத்தை மறைக்க, தங்களுடைய செயல்களினால் வெறுக்கப்பட்ட, பெரும்பான்மையினரினால் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்ட ஒரு சமூகத்தினரின் மீது மிகக் கொடுமையான தாக்குதல்களை செயல்படுத்தினான். கிறிஸ்தவர் (கிறிஸ்து) என்பவரிடமிருந்து அவர்களுடைய பெயரைப் பெற்றனர்; மேலும் அவர், "திபேரியஸின்' ஆட்சி காலத்தில் ரோம நாட்டின் ஒரு நிர்வாக அதிகாரியான பொந்தியு பிலாத்துவின் கரங்களால் கொடுமையான தண்டனை அனுபவித்தார்.

ஆகையினால், மிகவும் துடுக்குத்தனமான மூடநம்பிக்கையினால் இத்தகைய செயல்கள் தீமையின் பிறப்பிடமான யூதேயாவில் மட்டுமல்ல, உலகத்தில் அவமானத்திற்குரிய செயல்களின் மையமாக கருதப்படும் ரோமாபுரியிலும் நிகழ்ந்தன.

- அடுத்த இதழில் தொடரும்...

# உண்மையான கீழ்ப்படிதல்

கடவுளின் அன்புச் செல்லங்களே இவ்விதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது நீங்களும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கு உண்மையான கீழ்ப்படிதலைப் பற்றி பார்க்கப்போகிறீர்கள் கற்றுக்கொள்ளலாமா?

ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். மூத்த குமாரனை அப்பா அழைத்து மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய் என்றார். அதற்கு அவன் நான் வேலை செய்ய மாட்டேன் என்றான், ஆகிலும் அவன் மனஸ்தாபபட்டுப் போய் வேலைச் செய்யப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து நீ போய் இன்றைக்கு என் வயலிலே வேலை செய் என்றார். அதற்கு அவன் போகிறேன் ஐயா, என்று சொல்லியும் போகவில்லை. இந்த இரண்டு பேரில் எவன் தகப்பனுக்கு உண்மையான கீழ்ப்படிதலைக் காட்டினான் மூத்தவன் தான் என்று உங்களுக்கும் தெரியும்தானே! இன்றைக்கு உங்கள் அப்பா, அம்மா, ஏதாவது வேலை சொன்னால் நான் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு செய்யாமல் இருக்கக் கூடாது, பள்ளிக் கூடத்தில் உங்கள் ஆசிரியர் Home Work கொடுத்தாங்கள் என்றால் அதைச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டால் கட்டாயம் செய்துவிட்டு வரனும் ஊழியம் செய்வேன், பைபிள் வசனத்தை என் நண்பர்களுக்கு சொல்லுவேன் என்று தேவனிடம் இந்த வருடம் பொருத்தனைச் செய்திருந்தீர்கள் என்றால் அதைக் கட்டாயம் செய்யனும், இளைய மகன் செய்கிறேன் என்று சொல்லியும் செய்யவில்லை, ஆனால் மூத்த மகன் வேலை செய்ய போனான். எனவே நீங்களும் மூத்த மகனைப் போல உண்மையான கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும், கீழ்ப்படிவீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.



**மனப்பாட வசனம்:**

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, **(எபிரேயர் 5:8).**

**– அன்பு ஏசுதாஸ்**

*பொதுவான செய்திகள்*

## ஆங்கிலப் பழமொழிகளும் அதற்கு இணையான தமிழ் பழமொழிகளும்

- A bad penny always comes back.
  செல்லாக்காசு திரும்பியே தீரும்.
- A bad tree does not yield good apples.
  நச்சு மரம் நற்கனி ஈனாது.
- A bad workman quarrels with his tools.
  ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தைக் குறை சொல்வான்.
- A bargain is a bargain.
  அள்ளிக்கொடுத்தா சும்மா, அளந்து கொடுத்தா கடன்.
- A barking dog seldom bites.
  குரைக்கிற நாய் கடிக்காது.
- A best friend is found in adversity.
  அன்பான சினேகிதனை ஆபத்தில் அறி.

# தவறாமல் சபை கூடுங்க...



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள். ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்தில் நாம் புதிய தீர்மானங்களை எடுப்போம். இந்த ஆண்டும் கூட நம்மை படைத்த (கடவுள்) கர்த்தர் விரும்புகிற ஒன்றை பற்றி தெரிந்துகொண்டு, அதை தீர்மானமாக எடுக்கலாம்.

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்கு போவதற்கு வனாந்தரத்தின் வழியாகத்தான் போக வேண்டியிருந்தது. தேவன் அங்கே அவர்களுக்கு சில கட்டளைகளை விதித்தார். அதில் ஒன்று “ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசாரிப்பாயாக” என்பதே. அதாவது வாரத்தின் ஏழாம் நாளில் இஸ்ரவேல் சபையார் எல்லாரும் ஒன்றாக கூடி அவரை சேவிக்க வேண்டும். அந்த நாளில் வேறெந்த வேலையும் செய்யக்கூடாது என்பது தேவ கட்டளை. ஒரு ஓய்வு நாளில் இஸ்ரவேல் சபையாரில் ஒருவர் விறகுகளை பொறுக்கிக் கொண்டிருந்தான். அவனை பிடித்துக்கொண்டுபோய் தங்களை வழிநடத்தி வந்த மோசேயினிடத்திலும் ஆரோனிடத்திலும் நிறுத்தினார்கள். கர்த்தர் மோசேயிடம், அவனை பாளயத்திற்கு வெளியே கொண்டுபோய் சபையார் எல்லாரும் கல்லெறிய வேண்டுமென்றார். சபையார் எல்லாரும் அப்படியே செய்தார்கள அவன் மரித்துப் போனான். பிள்ளைகளா! இன்று நாம் புதிய ஏற்பாட்டின் காலத்தில், இப்படிப்பட்ட உடனடி தண்டனைகளை (சபை வடாதபோது) பெறாவிட்டாலும், ஆசையுடன் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். சபை கூடுவது நமக்கு கிடைத்து பெரிய Gift. அதை நீங்க சிறு வயதில் இருந்தே Miss பண்ணக்கூடாது !

குட்டீஸ் ! இதிலிருந்து இந்த ஆண்டிற்கான நம்ம தீர்மானம் என்ன தெரியுமா? சபை எப்பொழுதெல்லாம் கூடிவருகிறதோ அப்போதெல்லாம் நானும் கலந்துகொள்வேன் என்று தீர்மானம் பண்ணிக் கொள்வோம். அவை தொழுகை, வேத ஆராய்ச்சி, சிறுவர் வேதாகம பள்ளி, ஜெபக்கூட்டம், நற்செய்தி கூட்டம் என்று சபையின் எல்லா கூடுகையிலும் கலந்துகொண்டு நம் தீர்மானத்தை நிறைவேற்றி தேவ ஆசீர்வாதத்தை பெறலாம் !

**மனப்பாட வசனம் :** “சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும். **(எபிரேயர் 10:25).**

**– குயினி பிரதீப்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : 92 4421 4421 & 92 4431 4431) **Nambikai TV :** Every Sunday 3.30 p.m. **Salvation TV :** Every Sunday 2.00 p.m.

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842 363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

## ஜனவரி மாத கேள்விகள்

1. ஆண்டவர் இயேசு யார் நடுவில் இருக்கிறேன் என்று சொன்னார்?
2. தேவதூதன் மிகுந்த சத்தமிட்டு யாரை தொழுதுக் கொள்ளுங்கள் என்றான்?
3. நாம் எப்படி நியாயம் தீர்ப்பவரை பிதாவாக தொழுதுக் கொள்கிறோம்?
4. தம்மை தொழுதுகொள்கின்ற யாவருக்கும் பிதா எப்படிப்பட்டவராக இருக்கின்றார்?
5. எல்லா மனுஷருக்கும் நாம் என்ன செய்ய வேண்டும்?
6. தேவன் யாருக்கு செவிக்கொடுப்பார் என ஆண்டவர் இயேசு சொன்னார்?
7. அன்னாள், தேவாலயத்தை விட்டு நீங்காமல் என்ன செய்தாள்?
8. கர்த்தர் வருஷங்களை எதினால் முடிசூட்டுகிறார்?
9. எப்படிப்பட்ட அலங்காரத்துடன் கர்த்தரை தொழ வேண்டும்?
10. 'நான் உங்களுக்கு செவிக்கொடுப்பேன்' யார் யாரிடம் சொன்னது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-02-2022**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. எபி 12:4
2. ரோமர் 6:12
3. நீதி 28:9
4. 2 சாமு 12:13
5. எபி 12:1
6. 2 கொரி 4:2
7. சங் 119:11
8. 1 கொரி 15:33
9. யாக் 1:14
10. 1 யோவா 3:9

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


1. C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
2. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
3. Mrs. D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
4. J. விஜய் - மதுரை
5. J. ஜான்சி - ஆனைமலை
6. Mrs. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
7. Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
8. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
9. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
10. Mrs. R.P. டேவிட் - ஏற்காடு
11. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
12. Mrs. ஜெனி - கரூர்
13. Mr. டேவிட் சாந்தகுமார் - வல்லம்
14. S. பாக்கிய ராஜம் - மதுரை
15. Mrs. சாந்தி ஜோயஸ் - திருச்சி
16. G. பீற்றர் பால்ராஜ் - ஆறுமுகநேரி
17. M.S. ஹெலன் திலக் - தூத்துக்குடி
18. R. நாகலிங்கம் சித்ரா - திருச்சி
19. Mr. சூசை மரியான் - சென்னை
20. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
21. Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
22. A.G. சாமுவேல் - தூத்துக்குடி
23. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
24. Mrs. மேரிராஜ் - மதுரை
25. R. சரோஜா - தென்கலம்
26. A. ஆனந்த கதிரோன் - சென்னை
27. Mrs. விமலா ஜெபராஜ் - சென்னை
28. Mrs. லீலா ஜோசப் - கோவை
29. A. டேவிட் விஸ்வநாதன் - கோவை
30. Mrs. இந்திரா பாண்டி - திருமங்கலம்
31. Mrs. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
32. A. ரோஸ்மேரி - சென்னை
33. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
34. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
35. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
36. Mrs. D. மீனாள் - மூலனூர்
37. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
38. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
39. Mrs. காந்தா மனோகரன் - கதிருச்சி
40. D. அலெக்சாண்டர் சாமுவேல் - சென்னை

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th January 2022
Posted at Arasaradi HPO on 10th 11th January 2022


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


**If undelivered please return to :**

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To